**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.1/2023 இன் அ.வ.எண்.59/2023**

1. கார்த்திகைச்செல்வி
2. பழனிச்சாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கதிரேசன்
2. சீதாமணி அம்மாள்(இறந்துவிட்டார்)
3. போதும்பொண்ணு
4. தமிழ்நாடு மின்சார வாரியம்,
   அதன் காரியாபட்டி மின்வாரிய
   உதவி மின்பொறியாளர்,
   காரியாபட்டி வடக்கு
5. சுப்பையா(இறந்துவிட்டார்) ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 15.11.2023 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். மோகன், அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 4ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 1,2,5 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுவில் கண்ட விபரப்படி சீர்திருத்தம் செய்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த அனுமதி கோரி கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆரம்பத்திலேயே வழக்கில் ஆஜராகாமலேயே

எக்ஸ்பார்ட்டி ஆக இறந்துவிட்டார். மேலும் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துவிட்டார். எனவே 2ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க அவசியமில்லை. எனவே 2ம் பிரதிவாதிக்கு நேரே இறந்துவிட்டார் என்று திருத்தினால் மட்டும் போதுமானது. இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டார். 5ம் பிரதிவாதியிட மிருந்து சொத்தை சுவாதீனம் பெறவேண்டுமென்று பரிகாரம் கேட்டுள்ளார். ஆனால் 5ம் பிரதிவாதியின் கைவசம் தாவாச் சொத்து இல்லை. ஆனால் தாவா வீடு 3ம் பிரதிவாதி அனுபவத்தில் பிராதுக்கு பிற்பாடு இருந்து வருகிறது. எனவே பரிகாரம் பாராவில் 5ம் பிரதிவாதியை கால் செய்து வாதிகளிடம் சுவாதீனம் கொடுக்க உத்தரவிட்டும் 5ம் பிரதிவாதி காலி செய்ய மறுக்கும்பட்சத்தில் சமூகம் நீதிமன்றத்தின் மூலமாக 5ம் பிரதிவாதியை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்றி என்ற வாசகத்தை அடித்துவிட்டு "தாவாச் சொத்திலிருள்ள வீட்டிலிருந்து 3ம் பிரதிவாதி காலி செய்து வாதிகளிடம் சுவாதீனம் கொடுக்கும்படி உத்தரவிட்டும், 3ம் பிரதிவாதி காலி செய்ய மறுக்கும் பட்சத்தில் சமூகம் நீதிமன்றத்தின்மூலமாக 3ம் பிரதிவாதியை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்றி" என்று திருத்தவேண்டியுள்ளது. எனவே அதன் அடிப்படையில் அசல் வழக்கினை மனுவில் கண்ட விபரப்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளிக்கவேண்டும்.

3. <u>3ம் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 23.11.2020ம் தேதியிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பாரா 8ல், தாவாச் சொத்தில் 5ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் குடியிருந்து வருவதாக ஒப்புக்கொண்ட நிலையில் இம்மனு தேவையற்ற ஒன்றாக உள்ளது. மேலும் அசல் வழக்கில் தாவாச் சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரும் மனுதாரர்கள் இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளது. மேலும் தாவாச் சொத்துக்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சக்திவேல் பெயரில் 242ம் நம்பர் பட்டா உள்ளது என்று மனுதாரர்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை தேவை யில்லை என்றவகையில் அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்யக்கோரும் இம்மனு

சட்டப்படி ஏற்புடையதாக இல்லை. எனவே மனுதாரர்களின் மனுவை 3ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில், இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆரம்பத்திலேயே வழக்கில் ஆஜராகாமலேயே எக்ஸ்பார்ட்டி ஆக இறந்துவிட்டதாகவும் மேலும் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துவிட்டதாகவும் எனவே 2ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க அவசியமில்லை என்றும் எனவே 2ம் பிரதிவாதிக்கு நேரே இறந்து விட்டார் என்று திருத்தினால் மட்டும் போதுமானது என்றும் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும் 5ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை சுவாதீனம் பெற வேண்டுமென்று பரிகாரம் கேட்டுள்ளதாகவும் ஆனால் 5ம் பிரதிவாதியின் கைவசம் தாவாச் சொத்து இல்லை என்றும் ஆனால் தாவா வீடு 3ம் பிரதிவாதி அனுபவத்தில் பிராதுக்கு பிற்பாடு இருந்து வருவதாகவும் எனவே பரிகாரம் பாராவில் 5ம் பிரதிவாதியை கால் செய்து வாதிகளிடம் சுவாதீனம் கொடுக்க உத்தரவிட்டும் 5ம் பிரதிவாதி காலி செய்ய மறுக்கும்பட்சத்தில் சமூகம் நீதிமன்றத்தின் மூலமாக 5ம் பிரதிவாதியை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்றி என்ற வாசகத்தை அடித்துவிட்டு "தாவாச் சொத்திலிள்ள வீட்டிலிருந்து 3ம் பிரதிவாதி காலி செய்து வாதிகளிடம் சுவாதீனம் கொடுக்கும்படி உத்தரவிட்டும், 3ம் பிரதிவாதி காலி செய்ய மறுக்கும்பட்சத்தில் சமூகம் நீதிமன்றத்தின் மூலமாக 3ம் பிரதிவாதியை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்றி" என்று திருத்த வேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

6. 3ம் எதிர்மனுதாரர்கள்தரப்பில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 23.11.2020ம் தேதியிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பாரா 8ல், தாவாச் சொத்தில் 5ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் குடியிருந்து வருவதாக ஒப்புக் கொண்ட நிலையில் இம்மனு தேவையற்ற ஒன்றாக உள்ளதாகவும் மேலும் அசல் வழக்கில் தாவாச் சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரும் மனுதாரர்கள் இறந்து போன 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசிய மானதாக உள்ளதாகவும் மேலும் தாவாச் சொத்துக்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனார்

சக்திவேல் பெயரில் 242ம் நம்பர் பட்டா உள்ளது என்று மனுதாரர்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை தேவை யில்லை என்றவகையில் அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்யக்கோரும் இம்மனு சட்டப்படி ஏற்புடையதாக இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்தரப்பில், 2ம் பிரதிவாதி வழக்கின் ஆரம்பத்திலேயே எக்ஸ்பார்ட்டியாகி இறந்துவிட்டார் என்றும் மேலும் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துவிட்டதாகவும் எனவே 2ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க அவசியமில்லை என்றும் எனவே 2ம் பிரதிவாதிக்கு நேரே இறந்து விட்டார் என்று திருத்தினால் மட்டும் போதுமானது என்றும் கூறப்பட்டுள்ள நிலையில் 3ம் எதிர்மனுதாரர்தரப்பில், அசல் வழக்கில் தாவாச் சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரும் மனுதாரர்கள் இறந்து போன 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளதாகவும் மேலும் தாவாச் சொத்துக்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சக்திவேல் பெயரில் 242ம் நம்பர் பட்டா உள்ளது என்று மனுதாரர்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை தேவையில்லை என்ற வகையில் அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்யக் கோரும் இம்மனு சட்டப்படி ஏற்புடையதாக இல்லை என்றும் கூறப்பட்டிருந்தாலும், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ள நிலையில், இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும் மனுதாரர்தரப்பில், இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும் 5ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை சுவாதீனம் பெறவேண்டுமென்று பரிகாரம் கேட்டுள்ளதாகவும் ஆனால் 5ம் பிரதிவாதியின் கைவசம் தாவாச் சொத்து இல்லை என்றும் ஆனால் தாவா வீடு 3ம் பிரதிவாதி அனுபவத்தில் பிராதுக்கு பிற்பாடு இருந்து வருவதாகவும் எனவே அது குறித்தும் பிராதை திருத்தவேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், 3ம் எதிர்மனுதாரர்தரப்பில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 23.11.2020ம் தேதியிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பாரா 8ல், தாவாச் சொத்தில் 5ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் குடியிருந்து வருவதாக ஒப்புக் கொண்ட நிலையில் இம்மனு தேவையற்ற ஒன்றாக உள்ளதாகக்

கூறப்பட்டாலும், மனுதாரர்தரப்பில் கூறப்படுவதுபோல் தற்போது தாவாச் சொத்தில் 3ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறாரா? அல்லது 3ம் எதிர்மனுதாரர் குறிப்பிடுவதுபோல், தாவாச் சொத்தில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசுகள் குடியிருந்து வருகிறார்களா? என்பது குறித்து அசல் வழக்கின் விசாரணையின் முடிவில்தான் தீர்மானிக்க முடியும்.

9. எதிர்மனுதாரர்தரப்பில், மனுதாரர்களின் மனுவினை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும், மேற்படி மனுவில் குறிப்பிட்ட சீர்திருத்தம் செய்வதால் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எவ்வகையில் பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து மறுப்புரையில் எவ்வித சங்கதிகளும் கூறப்படவில்லை. மேலும் ஒரு வழக்கில் தரப்பினர்களை சேர்க்கவோ நீக்கவோ வழக்குத் தாக்கல் செய்த வாதிக்கு உரிமை உள்ளது. மேலும், மனுவில் குறிப்பிட்டுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்வதால் வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறிவிடப்போவதில்லை. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 01.12.2023 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் : </u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம்,    அருப்புக்கோட்டை
வ.வி.எண்.1/23 இன்
அ.வ.எண்.59/2023
உத்தரவு நாள் – 01.12.2023